[1984 பிப்ரவரி 15]

7. ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர், கல்வி, அறிவியல், தொழில்நுட்பவியல் துறை (மாநில அரசு பிரதிநிதி).

இக்குழு உறுப்பினர்களில், பேராசிரியர் ஜி. ராம்ரெட்டி, டாக்டர் டி. பி. பட்நாயக் மற்றும் கல்விச் செயலாளர் ஆகியோர் மட்டும் 1983 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 மற்றும் 6 ஆகிய இரு தினங்களிலும் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தினைப் பார்வையிட்டன. இக்குழுவின் உறுப்பினரான திரு. கொல்ஹாட்கர், மைய அரசு கல்வித் துறை இணைச் செயலாளர் 30-5-83, 31-5-83 தேதிகளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்து தன்னுடைய பரிந்துரைகளையும் பல்கலைக் கழக மான்யக் குழுவுக்கு தந்தார்.

(ஈ) இக்குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பல்கலைக்கழக மான்யக் குழு, தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்தல் வேண்டுமென அரசுக்குத் தெரிவித்தது. இது குறித்துக் கல்வி அமைச்சர், மையக்கல்வி அமைச்சர் பல்கலைக்கழக மான்யக் குழுத் தலைவர் மற்றும் மைய அரசு அலுவலர்களுடன் நேரில் கலந்துரையாடிய பின்னர், பல்கலைக் கழக மான்யக் குழு பொதுவான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களைத் (Institutional Development Grants) தவிர இதர திட்டங்களுக்கு நிதி உதவி பெற, தமிழ்ப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மான்யக் குழுச் சட்டப் பிரிவு 12 (பி)-ன் கீழ் தகுதியானது என அறிவித்து, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்த பின்னரே, பொதுவான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி கிடைக்குமெனவும், தெரிவித்துள்ளது.

இணைப்பு II

(155-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 32-க்கான விடையைக் காண்க.)

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏலகிரிமலை ஜவ்வாது மலைப்பகுதிகளில் ரூ. 124.658 லட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை நடப்பு நிதியாண்டில் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் கீழ்க்கண்ட புதிய திட்டங்களையும் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விவசாயம்.	செலவு (ரூபாய் லட்சத்தில்).
3 விவசாயக் கிடங்குகள் அமைத்தல்	0.75
தகரக்குப்பத்தில் மாபெரும் பழப்பண்ணை அமைத்தல்	6.82
ஏலகிரி மலையில்மங்கலத்தில் அலங்கார பூங்காவும் பழத்தோட்டமும் அமைத்தல்	1.00
மண்வளப் பாதுகாப்பு	4.00

[1984 பிப்ரவரி 15

	செலவு (ரூபாய் இலட்சத்தில்).
காலநடை பராமரிப்பு:	
புதூர் நாட்டில் கால்நடை மருந்தகம் அமைத்தல்	4.56
ஏலகிரி மலையில் கால்நடை துணை நிலையம் அமைத்தல்	2.01
பால் குளிர்சாதனப் பெட்டி மற்றும் உபகரணங் களும்	1.23
கிராமக் கைத்தொழில்:	
புளி பதப்படுத்தும் நிலையம் அமைத்தல்	1.25
2 பட்டுப்புழு வளர்ப்பு நிலையம் அமைத்தல்	3.36
சிறுபாசனத் திட்டம்:	
புங்கனூரில் ஏரி அமைத்தல், மேட்டுகளியூரில் சிறு அணைக்கட்டுதல், நிலவூர் ஏரியைப் பழுது பார்த்தல்	4.07
வனப்பாதுகாப்பு:	
கிணறு தோண்டுதல்	2.00
பள்ளி விடுதி அமைத்தல்	1.29
சாலை அமைத்தல்	1.62
வன வளர்ப்பு	1.00
கூட்டுறவு:	
நம்மியம்பட்டில் லேம்ப் சொசைட்டி நிறுவுதல்	5:50
சாலைகள்:	
அமிர்தி முதல் ஜம்னா மருதூர் வரை சாலை அமைத்தல்	6.00
குடிநீர் வசதி:	
9 கிராமங்களுக்கு குடிநீர் வசதியளித்தல்	9.00
சமுதாய வளர்ச்சி:	
10 கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குதல்	0.10
சுற்றுலா:	
ஏலகிரியிலுள்ள புளிச்சுக்குட்டையில் மான் பூங்காவும் குளமும் அமைத்தல்	1.80
கல்வி:	
25 முதியோர் பள்ளிகளும், 2 உறைவிடப் பள்ளி களும் நிறுவுதல்	2·27
சுகாதாரம்:	
ஜவ்வாது மலையில் தொங்குமலை என்னுமிடத்தில் மருந்தகம் அமைத்தல்	3.95
ஜம்னாமருதூரில் நடமாடும் மருந்தகம் அமைத்தல்	2.30
சமூக நலம்:	
நம்மியப்பட்டில் தையல் பயிற்சி நிலையம் அமைத்தல்	0.40

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS